Board for Medium Industries.

*46 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to set up a Board for Medium Industries in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இது போன்ற நடுத்தரத் தொழில்களுக்கென்று ஒரு வாரியம் அமைப்பதால் அதனைக் கொண்டு நடுத்தரத் தொழில்களுக்கு இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவியாக இருக்கும். அரசாங்கம் அதற்கான திட்டத்தைப் பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழில் வளர்ச்சிக்குப் பல குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு ஒரு குழு இருக்கிறது. மாநிலம் முழுவதிற்கும் பெரிய தொழில்கள் வளர்ச்சிக்கு ஸ்டேட் அட்வைசரி போர்டு இருக்கிறது. மீடியம் ஸ்கேல் என்று கேள்வியில் இருந்த காரணத்தினால், இல்லை என்று சொன்னேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ரசாயன உரத்தொழிற்சாலை

*47 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ரசாயன உரத்தொழிற்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கு ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை விவசாய மாவட்டமாக இருப்பதால் அங்கு ஒரு உரத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு இனியாகிலும் அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: உரம் எங்கு உற்பத்தி செய்தாலும் தஞ்சைக்குத் தான் அனுப்பப்படுகிறது.

திரு. ஆர். கருப்பையா: குறிப்பாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக ரசாயன உரத்தின் விலை மேலும் ஏறிக்கொண்டு போகிறது. நாம் கோளாவிலிருந்து வருகிற ஃபாக்ட் என்ற

1970 ஆகஸ்ட் 26]

உரத்தைத் தான் அதிகமாக வாங்குகிறோம். ஆகவே, தமிழ் நாட்டிலேயே ஒரு உரத் தொழிற்சாலையை ஏற்படுத்தி, எளிய முறையில் உரம் கிடைக்கச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, ஆட்சிக்கு வந்த பிறகு உரம் வாங்குவதற்கு ஆள் இல்லை, தேங்கிக் கிடக்கிறது என்ற குற்றச்சாட்டைத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பொழுது அங்கத்தினர் சொல்வது புதியதாக இருக்கிறது. நம்முடைய அரசு இதில் தயக்கம் காட்டவில்லை. மெட்ராஸ் பெர்டிலைஸர்சில் அடுத்த ஆண்டு உற்பத்தி தொடங்கப்பட்டுவிடும். தூத்துக்குடித் தொழிற்சாலையைப் பொறுத்த அளவில் நாப்தா என்ற மூலப் பொருள் கிடைக்கிற பிரச்சனை மத்திய அரசாங்கத்தோடு விவாதத்தில் இருக்கிறது. இன்று இரவு அதைப்பற்றியும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சரோடு பேச இருக்கிறார்கள். தூத்துக்குடித் தொழிற்சாலையில் உற்பத்தியைப் பெருக்குவதற்கு ரூ. 52 கோடிக்கு திட்டம் போட்டு, ஏராளமான உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்பொழுதே இருக்கிறது.

திருப்பத்தூர் அருகே மைகாத் தகடு சுரங்கம்

* 48 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத் திருப்பத்தூர் அருகில் மைக்காத் தகடு எடுக்கும் சுரங்க வேலைக்காக எத்தனை ஏக்கரா நிலம் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது?

(இ) அவ்வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் வட்டத்திலுள்ள செவத்தூர், எலவம்பட்டி எனும் இரு கிராமங்களிலிருந்து 52.76 ஏக்கரா பட்டா நிலங்களை ரூ. 1,16,131.08 (ரூபாய் ஒரு லட்சத்துப் பதினாறாயிரத்து நூற்று முப்பொத்தொன்றும் பைசா எட்டும்) க்கு சுரங்க வேலைக்காக வாங்கப்பட்டது.

(இ) அடுத்த மூன்று மாத காலத்திற்குள் சுரங்க வேலை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான துவக்க ஏற்பாடுகள் யாவும் முன்னரே மேற்கொள்ளப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன்: இதற்காக வேண்டி ஒதுக்கப்பட்டுள்ள மூலதனம் எவ்வளவு? இன்னும் எவ்வளவு தினங்களில் அடிப்படையான வேலைகள் முடிந்து, இந்த சுரங்கவேலை ஆரம்பிக்கப்படும் என்பதைக் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சுரங்க வேலை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. வெர்மிகுலேட் என்ற பொருள் திருப்பத்தூருக்குப் பக்கத்து கிராமங்களில்